
திருவாசகம் - 25
ஆசைப்பத்து கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# ஆசைப்பத்து கதை வடிவில்
# ஆத்தும இலக்கணம்
# திருப்பெருந்துறையில் அருளியது

**கருடக்கொடியோன் காணமாட்டாக் கழற்சே வடியென்னும்**

**பொருளைத் தந்திங் கென்னை யாண்ட பொல்லா மணியேயோ**

**இருளைத் துரந்திட் டிங்கே வாவென்றங்கே கூவும் அருளைப்**

**பெறுவான் ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே. 01**

அருணாசலம், சுவாமியாரின் அருகில் வந்தமர்ந்தான். அவனுக்குத் தன் வாழ்வை நினைக்கப் பெருந் துன்பமாக இருந்தது. தனது வாழ்வைப்பற்றித் தனது மனதுக்குள் வைத்துத் துன்பப்படாது அதை யாருக்காவது சொன்னால் தீர்வு கிடைக்கும் என்று நினைத்தான். வியாபாரம் செய்யும் நாட்களில் அதைப்பற்றிய எண்ணம் வரவில்லை. வியாபாரத்தில் நட்டமடைந்து எல்லாவற்றையும் இழந்த பின்பு அவனைக் கண்டதும் மக்கள் விலகிச் சென்றனர். தன்னோடு சேர்ந்து குடித்து மகிழ்ந்தவர்களெல்லாம் விலகிச் செல்வதை நினைக்க அவனுக்கு வேதனையாக இருந்தது. அதனால்தான் ஊரைவிட்டு இங்கே வந்தான். இங்கு வந்தபின்பு மனதில் இருந்த வேதனை சற்றுக் குறைந்திருந்தது.

“சுவாமி” சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண்களைத் திறந்தார்.

“சுவாமி, நான் பெரும் பாவம் செய்துவிட்டேன். எனது தந்தை மிகப்பெரிய விவசாயி. அவரிடம் ஏராளமான விளைநிலங்கள் இருந்தன. அவற்றில் விளைந்த தானியங்களைவிற்கத் தொடங்கித்தான் நான் வர்த்தகனானேன். நான் வியாபாரம் செய்வது எனது தந்தைக்குப் பிடிப்பதில்லை. அவர் சொல்வார்; “மகனே, வர்த்தகத்தை நேர்மையாகச் செய்ய முடியாது. அதனால் பாவம்தான் சேரும். நீ வர்த்தகத்தை விட்டுவிட்டு வேளாண்மையில் ஈடுபடு” என்பார். அப்படிச் செய்யாததுதான் எனது பிழை. காசு பணம் சேரச்சேர கூடாத நட்புகள் வந்து சேர்ந்துவிட்டன. எனது தந்தை எந்நேரமும் பஞ்சாட்சரத்தை ஓதியபடி இருப்பார். குடித்த நான் மாமிசம் உண்ணத்

தொடங்கிய பின்னர் அவர் எனது உறவைத் துண்டித்துவிட்டார்; "எனக்கு உன்னைத் தந்த சிவன் என்னைச் சோதிக்கிறார். எனது ஊழ்வினைகள் அது. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார், "சிவனே உனது திருவடி என்னும் துளைக்க முடியாத நிறைபொருளை எனக்குக் கொடுத்தருளினாய். இப் பிரபஞ்ச வாழ்வு எனும் மருளை நீக்கிவிட்டு அப்பாலுள்ள பரநிலை எனும் அருளைப்பெற ஆசைப்படுகிறேன். அதுபோல எனக்கும் வாழ்வில் உள்ள பிடிப்பு அற்றுவிட்டது. சிவனோடு சேர விரும்புகிறேன்" என்பார். அவர் இறக்கும்வரையும் என்னைப் பார்க்க விரும்பவில்லை. இறந்தபின்பும் பார்க்கக்கூடாது என்றும் கட்டளையிட்டிருந்தார். நான் செய்த சிவத்துரோகங்களை அவரால் மன்னிக்க முடியவில்லை. என்னைப்பற்றி அம்மாகூடக் கதைக்கமாட்டா. கதைத்தால் அவர் அம்மாவிடம் உணவு வாங்கி உண்ணமாட்டார். அவ்வளவு தீவிரமான சிவபக்தர். நான்…" அழுதான் அருணாசலம்.

**மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை என்பு தோல் போர்த்த**

**குப்பாயம்புக் கிருக்க கில்லேன் கூவிக்கொள்ளாய் கோவேயோ**

**எப்பா லவர்க்கும் அப்பாலாம் என்னாரமுதேயோ**

**அப்பா காண ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே. 02**

"என்னை எனது தகப்பனார் சேர்க்காதது எனது தாயாருக்கும், சகோதரர்களுக்கும் பெரும் மனவருத்தத்தைக் கொடுத்தபோதும் அவர்கள் அதை அப்பாவுக்குச் சொல்லப் பயந்தனர். அப்பா மூர்க்கத்தனமாகச் சிவனை விரும்புபவர். யாராவது சிவநிந்தனை செய்தால் அவர் அவர்களுடன் பெரும் பிரச்சினைப்படுவார். ஒருமுறை ஒழுங்காக வேலை செய்யும் ஒருவன், "சிவனைக் கும்பிட்டு என்ன பயன்? எனது வீடு விடியாமல் தான் இருக்கு" என்று சொன்னதை அப்பா அறிந்து அவனை வேலையில் இருந்து நீக்கிவிட்டார். அவன் எவ்வளவோ கெஞ்சியும் அவர் மனமிரங்கவில்லை. அது தெரிந்தும் அப்பாவின் தந்தையோடு என்னைப்பற்றி எனது தாயார் கதைத்தார். அவர் என்ன சொல்வார் என்று தெரிந்தும் அம்மா படும் துயரத்திற்காக அப்பப்பா தனது மகனோடு கதைத்தார், "அப்பா, அழியும் தன்மை வாய்ந்த உடல்களுக்காகப் பரிந்து பேசாதீர்கள். அழியும் என்பதால் நான் எனது உடலைப் பேணுவதில்லை. சிவனுக்குத் தொண்டு செய்வதற்காக உண்கிறேன். உடலைப் பேணுகிறேன். நீங்கள்தான் சிவனைப்பற்றிச் சொல்லி என்னைச் சிவபக்தராக்கினீர்கள். எனக்கு இப்பூமியிலுள்ள எவையும் வேண்டாம். பூமிக்கப்பாலுள்ள சிவனது திருவடியையே அடைய விரும்புகிறேன். அதற்கு அவன் இருந்தால் எனது

மனம் சஞ்சலப்படும். குடிக்கிறான்; மாமிசம் உண்கிறான்; பெண்களோடு தொடர்பு வைத்துள்ளான். அவனோடு சேர்ந்து குடிகாரர்கள் வருவார்கள். எமது பரம்பரையில் யாரும் குடிப்பதில்லை. மாமிசம் உண்பதில்லை. அப்படி இருக்க இவனை எப்படி நான் வீட்டில் அனுமதிப்பது" என்றவர். அப்படியான தகப்பனுக்குப் பிள்ளையாகப் பிறந்த நான் சிவத்துரோகங்கள் பல செய்து விட்டேன்" என்று அழுதான் அருணாசலம்.

**சீவார்ந் தீமொயத் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடில் இது சிதையக்**

**கூவாய் கோவே கூத்தா காத்தாட் கொள்ளுங் குருமணியே**

**தேவா தேவர்க் கரியானே சிவனே சிறிதென் முகநோக்கி**

**ஆவா வென்ன ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே. 03**

"அப்பா, நான் சிவனது திருவடியை அடைய வேண்டுமானால் உடல் வாழ்க்கையை வெறுத்தல் வேண்டும். அதனால் தான் உடல் ஆசைகளை நீக்கி வருகிறேன். அப்படி நீக்கி வரும்போது சிவத் துரோகங்களை அஞ்சாது துணிவுடன் செய்பவனை எப்படி நான் விரும்புவேன். சிவனை எந்நேரமும் நினைத்து அவனை ஆராதித்துச் சிவனை அடைய விரும்பும் நான் அழுக்கடைந்த எனது உறவுகளின் உடலை எப்படி நேசிப்பது. எனது உடலையே நான் வெறுக்கிறேன். ஞானப்பிரகாசனான சிவனே என்னை ஏற்றுக்கொள் என்று வணங்கும் என்னால் சிவனை வணங்காதவர்களை ஏற்கமுடியாது. அப்படியிருக்க எப்படி நான் இவனை ஏற்பேன்" என்று அப்பப்பாவுக்குச் சொன்னவர். அதனால் அப்பப்பாவும் என்னோடு கதைக்க விரும்புவதில்லை. எனது தீய செயல்களால் எனது உறவுகளை இழந்தது மட்டுமல்லாது எனது சொத்துக்களையும் இழந்துவிட்டேன்" என்றான் அருணாசலம்.

**மிடைந்தெனும் பூத்தை மிகக்கழுக் கூறல் வீறிலி நடைக்கூடம்**

**தொடர்ந்தெனை நலியத் துயருறு கின்றேன் சோத்தம்**

**எம்பெருமானே உடைந்துநைந் துருகி உன்னொளி நோக்கி**

**உன்திரு மலர்ப்பாதம் அடைந்து நின்றிடவும் ஆசைப்பட்டேன்**

**கண்டாய் அம்மானே. 04**

"அப்பா இறக்கும்போது எனது மூத்த சகோதரனுக்குச் சொன்னாராம், "மகனே, எந்நேரமும் சிவனை ஆராதித்துக் கொண்டிரு. அவன் உனக்கு எப்போதும் உதவுவான் என்பதை நினைவில் வைத்துக்கொள். சிவத்துரோகம் செய்யாதே.

சிவத்துரோகம் செய்பவர்களைப் பார்க்காதே. அவர்களைப் பார்த்தால் பாவம் உண்டாகும். கீழ்மைக்கும் துன்பத்திற்கும் இருப்பிடமான உடல் வாழ்க்கையை என்றோ நான் வெறுத்து ஒதுக்கி விட்டேன். உள்ளத்தால் சிவசோதியை நாடவேண்டும்" என்று சொன்னவராம்; இதை அயவலர்கள் சொல்லித் தான் எனக்குத் தெரியும். எனது சகோதரர்கள் அப்பாவின் உடலைக் கூடப் பார்க்க விடவில்லை. சிவசொருபியான அவரைப் பாவிகள் பார்க்கக்கூடாது என்றனர். எவ்வேளையிலும் திருவாசகத்தையே படிப்பார். அதனால் அவரை 'மாணிக்கர்' என்றே ஊரவர் அழைப்பர். மாணிக்கவாசக சுவாமிகளையும் சிவனோடு சேர்த்து வணங்கி அவரின் வழிநடப்பார் அவர். ஊரில் எனது சகோதரர்கள' ஓகோவென வாழ்கின்றனர். பலருக்கு உணவும் உடையும் பண உதவியும் செய்கின்றனர். ஆனால் எனக்கு ஒரு வயிறு சோறு தரமாட்டார்கள். அந்தளவு பாவி நான்" என்று அழுதான் அருணாசலம்.

**அளிபுண்ணகத்துப் புறந்தோல் மூடி அடியேனுடையாக்கை**

**புளியம் பழமொத் திருந்தேன் இருந்தும்விடையாய் பொடியாடி**

**எளிவந்தென்னை ஆண்டுகொண்ட என்னாரமுதேயோ**

**அளியேன் என்ன ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே. 05**

"சுவாமி இப்போது எல்லாவற்றையும் இழந்து உடுத்த உடையோடு உங்களை நாடி வந்துள்ளேன். அப்பா சொல்வது போல இக்கேடு கெட்ட உடல் இப்போ எனக்குப் பாரமாக உள்ளது. உலகவாழ்க்கை என்பது முத்தியை நோக்கமாகக் கொண்டது. புளியம்பழம் அதன் ஓட்டில் ஒட்டாது இருப்பது போல இந்தப் புல்லிய உடலில் பற்று வைக்காமல் வாழ வேண்டும்" என்று அப்பா அடிக்கடி சொல்வார். அதை நான் எனது இறுதிக் காலத்தில் பின்பற்ற நினைக்கிறேன். அப்பா சொல்வார் "சிவனே, உன்னைத்தவிர உறவென்று யாரையும் நான் நம்புவதில்லை. அதனால், உனது அருள் எனது உள்ளத்தை நிரப்ப வேண்டும். உனக்கு விருப்பமானவன் நான் என்று நீ எனக்குக் கூறவேண்டும் அது தான் எனது ஆசை. ஆக மாணிக்கவாசகர் மட்டுமா இவ்வாறு கூறவேண்டும். அப்படியல்ல உனது அடியார்கள் அனைவரும் இவ்வாறு கூறுதல் வேண்டும். அது தான் முறை. அதைத்தான் மாணிக்கவாசகரும் விரும்புகிறார். அதனால் எனது கோரிக்கையை ஏற்றுக்கொள் சிவனே என்பார். அவர் கூறும் போது நான் மது மயக்கத்தில் இருப்பதால் அவர் கூறுவதெல்லாம் எனக்கு வேடிக்கையாக இருக்கும். இப்போது தான் அவர் கூறியவை எனக்குப் புரிகிறது. அவ்வாறு நானும் வாழ விரும்புகிறேன்" என்றான் அருணாசலம்.

**எய்த்தேன் நாயேன் இனியிங் கிருக்ககில்லேன் இவ்வாழ்க்கை**

**வைத்தாய் வாங்காய் வானோர் அறியா மலர்ச்சே வடியானே**

**முத்தா உன்றன் முகவொளி நோக்கி முறுவல் நகைகாண**

**அத்தா சால ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே 06**

“சுவாமி உலக வாழ்க்கையெல்லாம் பொய்யானவை. என்னோடு கூடியவர்கள் எல்லோரும் தமக்குள் ஒரு குறிக்கோளை மறைத்து வைத்துக் கொண்டு தான் என்னுடன் கூடி மகிழ்வாக வாழ்வதாக நடித்தனர். எனது மனைவி எனது தாய்மாமனின் மகள். அவள் நான் குடிக்கத் தொடங்கியதும் என்னை வெறுக்க ஆரம்பித்தாள். நான் மாமிசம் உண்பதை அறிந்ததும் என்னோடு உறவு வைக்க மறுத்து விட்டாள். பின் எனது மகனையும் அழைத்துக் கொண்டு தனது தகப்பனின் வீட்டுக்கு சென்று விட்டாள். எனது மகன் நல்ல தொழில் பார்க்கிறான். அவன் என்னைத் தனது தந்தை என்று ஏற்பதில்லை. எனது நண்பர்கள் எல்லோரும் எனது பணத்தை குறி வைத்தே என்னுடன் பழகினர். எனக்கு மதுவை வாங்கித் தந்து விட்டு ஏமாற்றிப் பணத்தை பறித்துக் கொண்டு விலகிவிட்டனர். இந்த நிலையில் அஞ்சலி என்ற ஒரு பெண் வாழ்க்கையில் குறுக்கிட்டாள். ஆரம்பம் இன்பமாக இருந்தது. நாள்ச் செல்லச் செல்ல எனது பணம் குறைய அவள் இன்னொருவனோடு சென்றுவிட்டாள். இது தான் வாழ்க்கை. இதைத்தான் அப்பா அடிக்கடி சொல்வார்; “உனது உறவுகள் எல்லாம் கள்வர். பொறுத்த நேரத்தில் விலகிவிடுவர்கள். அதன் பின் சிவனைத் தஞ்சமடைவாய்” என்பார். அது உண்மை. அப்பா மாணிக்கவாசக சுவாமிகளது தொண்டர். மார்கழி மாதம் திருவெம்பாவை முடிந்ததும் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு விழா எடுப்பார். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வதுபோல “எனக்கு இந்த உலக வாழ்க்கை போதும். இனி உன்னை அடைந்து உனது பேரானந்தத்தில் திளைத்திருக்க விரும்புகிறேன்” என்றார். இனிச் சிவ நினைவைத் தவிர எனக்கு எந்த நினைவும் வேண்டாம்” என்றான் அருணாசலம்.

**பாரோர் விண்ணோர் பரவியேத்தும் பரனே பரஞ்சோதி**

**வாராய் வாரா வுலகந்தந்து வந்தாட்கொள்வானே**

**பேராயிரமும் பரவித் திரிந்தெம் பெருமான் என ஏத்த**

**ஆரா அமுதே ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே 07**

“மகனே, ஆசைகள் தான் துன்பங்களுக்குக் காரணி என்று நீ அனுபவபூர்வமாகத் தெரிந்து கொண்டாய். மரம் பழுத்தால் பறவைகள் தானாக வந்து

சேரும். குளம் வற்றி வறண்டால் பறவைகள் சென்றுவிடும். பின் மரம் பழுக்கவும், குளம் நிரம்பவும் அவை மீண்டும் வந்து சேரும். காரணமின்றி யாரும் யாருடனும் தொடர்பு வைப்பதில்லை. ஆரம்பத்தில் நன்மை செய்பவர்களாக வருவோர் பின் தமது காரியங்கள் முடிந்தாலோ இல்லைக் கூடாவிட்டாலோ பிரிந்து சென்று விடுவர். இது இயல்பு. இதை உணர்பவர்கள் தான் வாழத் தெரிந்தவர்கள். சிவனை வணங்கத் தொடங்கினால் அவன் எமக்கு பயன் கருதாது உதவுவான். பழகப்பழக அவன் நண்பனாகி விடுவான். பின் நாம் அவனுடன் உரிமையோடு பழகலாம். எம்மைத் தீய வழியில் செல்லவிடமாட்டான். உனது குடும்பம் சிவக்குடும்பம். அதனால் சிவனைப் பற்றி உனக்குத் தெரியும். தந்தை மாணிக்கவாசக சுவாமிகளைத் தனது குருவாக எண்ணுபவர் என்று சொன்னாய். அதனால் மாணிக்கவாசகரது திருவாசக மொழிகளின் அர்த்தம் உனக்குத் தெரியும். அவர் சொல்கிறார்; "மண்ணவரும் விண்ணவரும் போற்றும் பெருமானே, முத்தி கொடுத்து ஆட்கொள்பவனே, உனது நாமங்கள் ஆயிரத்தையும் ஓதி உன்னை வணங்க விரும்புகிறேன்" என்று சொல்கிறார். அந்த ஆயிரம் நாமங்களையும் உனது தற்போதைய நண்பனான மகாலிங்கம் தினமும் ஓதுவான். அவனோடு சேர்ந்து நீயும் ஓது. உனது மனம் அமைதியடையும். துன்பங்களும் அவற்றால் மனதில் உண்டாகும் காயங்களும் ஆறும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். "சரி அப்படியே செய்கிறேன்" என்றான் அருணாசலம்.

**கையால் தொழுதென் கழற்சே வடிகள் கழுமத் தழுவிக்கொண்டு**
**எய்யா தென்றன்தலைமேல் வைத்தெம் பெருமான் பெருமானென்று**
**ஐயா என்றன் வாயா லரற்றி அழல்சேர மெருகொப்பஐயாற்றரசே**
**ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே 08**

அருணாசலம் மகாலிங்கத்திடம் வந்து சுவாமியார் சொன்னவற்றைச் சொன்னான். பின் தனது வாழ்க்கையில் அஞ்சலி குறுக்கிட்டதைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான். அப்போது மகாலிங்கம், "அருணாசலம், உன்னைப் போலத் தான் நானும் வாழ்ந்தவன். குடியைப் பற்றியும் தெரியும். கூத்தியைப் பற்றியும் தெரியும். ஒரு தீய செயலை நினைத்தால் அது சிவபெருமானின் நினைவை விட ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்ததால் அது எதற்கும் விடாது. நாம் சிவனின் நாமங்களைச் சொல்ல வேண்டுமானால் தீயவற்றை எண்ணாதிருத்தல் வேண்டும். இவ்வாறு வாழ்ந்தால் தீயவைகாலப் போக்கில் மறைந்து சிவநினைவு மனதை நிரப்பிவிடும். சிவநினைவு வந்துவிட்டால் எந்த நினைவும் எம்மைத் துன்புறுத்தாது. அதனால் கடந்த காலத்தை எண்ணுவதை விட்டுவிடு. மறக்க வேண்டுமானால் அதை நினைக்காதிருத்தல் வேண்டும்.

காலையில் எழுந்து சிவனை நினைத்துக் கொண்டு காலைக்கடன்களை முடி. பின் கூடையை எடுத்துச் சென்று மலர்களைப் பறித்துவா. அதன் பின் மாலை கட்டு. மாலை கட்ட நான் உனக்கு சொல்லித் தந்துள்ளேன். அதன் பின் கட்டிய மாலையை சிவனுக்குச் சூடி விட்டு மண்டபத்தில் கண்மூடி அமர்ந்து சிவனது நாமங்களைச் சொல்ல வேண்டும். நாளைக் காலையில் நான் சொன்னபடி செய்துவிட்டு வா" என்றான் மகாலிங்கம்.

**செடியா ராக்கைத் திறமற வீசிச் சிவபுரநகர்புக்குக்**

**கடியார் சோதி கண்டுகொண்டென் கண்ணினை களிகூரப்**

**படிதா னில்லாய் பரம்பரனே உன்பழஅடியார் கூட்டம்**

**அடியேன் காண ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே 09**

மறுநாள்க்காலை அருணாசலம் குளித்துவிட்டு பூக்களைப் பறித்து வந்து மண்டபத்தில் இருந்து மாலை கட்டினான். கட்டி முடிந்ததும் அதைச் சிவனின் கழுத்தில் போட்டபோது அவனது உடல் சிலிர்த்தது. உணர்வுகள் மரத்தன. மகாலிங்கம் தான் கொண்டு வந்த மாலையைச் சிவனுக்கு சூடி விட்டு கற்பூரத்தைக் கொழுத்திக் காட்டினான்.

"அருணாசலம், சிவனை வணங்க யாரின் துணையும் தேவையில்லை. சிவன் தமிழன். தமிழனின் தெய்வம். அதனால் நாம் தமிழில் ஆராதிக்கலாம். நாமே தூபதீபம் காட்டலாம். இதன்மூலம் எமக்கும் சிவனுக்குமிடையே நெருக்மான ஒரு தொடர்பு உண்டாகிறது. அது நாளடைவில் வளர்ந்து எம்மை மாற்றிவிடும். ஐந்தெழுத்தைத்தான் சிவனும் அம்மையும் விரும்புவார்கள். சிவனுக்குக் கோடிக்கணக்கான மந்திரங்கள் இருப்பினும் அவன் விரும்புவது செந்தமிழ் மந்திரமான ஐந்தெழுத்தையே. அதனால் முதலில் அதை ஓதுவோம். பின் சிவனது நாமங்களைச் சொல்லிச் சொல்லிப் பூக்களைச் சிவன்மீது போடுவோம். இதன்மூலம் சிவனோடு நீ ஐக்கியமாகிவிடுவாய். அதற்காகத் தான் மாணிக்கவாசக சுவாமிகள்; "குற்றங்கள் நிறைந்த இந்த உடம்பின் தொடர்பை அறவே ஒழித்துவிட்டு ஒப்பில்லாத சுயஞ்சோதியாகிய சிவனுடன் சன்னிதானத்திலும், உன்னுடைய பழைய பக்தர்களின் கூட்டத்திலும் நிலைத்திருக்க விரும்புகின்றேன்" என்கிறார். இதை ஏன் சொல்கிறேன் தெரியுமா…? தான் பெற்ற இன்பத்தைச் சிவனடியார் அனைவரும் பெற வேண்டும் என்ற நன் நோக்கத்திற்காகத்தான். சிவனது நாமத்தைச் சொல்லும்போது ஐம்புலன்களும் அடங்கிச் சிவநினைவாகவே இருக்க வேண்டும். உலகில் நடப்பவை எதுவும் தெரியக்கூடாது" என்றார் மகாலிங்கம்.

**வெஞ்சேலனைய கண்ணார்தம் வெகுளிவலையில் அகப்பட்டு**

**நைஞ்சேன் நாயேன் ஞானச் சுடரே நானோர் துணைகாணேன்**

**பஞ்சேரடியாள் பாகத்தொருவா பவளத் திருவாயால் அஞ்சேல் என்ன**

**ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே 10**

அருணாசலத்திற்குச் சிவனது நாமங்களைக்கூறிப் பூப்போடுவது மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. சிவனை வணங்கும்போது அவனுக்குத் தனது தந்தையின் நினைவுதான் வரும். "சிவனே, எனது தந்தையின் நிம்மதியைக் குலைத்தவன் நான். அவருக்கு என்னால் எவ்வளவு துன்பம். அதை வெளியே சொல்லாது மனத்தில் வைத்துப் புழுங்கியவர். அவர் ஒருநாள் சொன்னார்; "அருணாசலம், மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தைப்படி. அவர் உலக நடப்புக்கள் எல்லாவற்றையும் கூறி அதற்குப் பரிகாரமும் சொல்லியிருக்கிறார். உன்னைப் போன்ற காமப் பித்தர்களுக்காக அவர் இவ்வாறு சொல்கிறார்; "காமவலையில் சிக்கி மெலிந்தவன் நான். ஞானச்சுடரே, அம்பிகையின் மணாளனனே உன்னையன்றி எனக்கு யாரின் துணையும் இல்லை. அஞ்சவேண்டாம் என்று உனது பவளத் திருவாயைத் திறந்து சொல். அதைக்கேட்க ஆசைப்படுகிறேன்" என்கிறார். இது உன்போன்றவர்களுக்காக அவர் குற்றங்களைத் தன்மேலேற்றிப் பாடியது. அதனால் சிவனைத் தொழு. உனது காமமயக்கம் தீரும்" என்றவர். அன்று நான் உணர்ந்திருந்தால் இன்று இந்நிலை எனக்கு உருவாகியிருக்குமா…?" என்று நினைத்தபோது அவனது கண்கள் கலங்கி கன்னங்களால் கண்ணீர் வழிந்தது.

திருச்சிற்றம்பலம்.